மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.33/2025</u>

2026ம் ஆண்டு ஜுன் 10ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரிமுத்து | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.06.2026 வா.சா.4 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றும் நான் சதீஷ்குமார் அழைத்ததன் பெயரில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். வழக்கு பற்றிய விபரங்களை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் மூன்று மாதங்களுக்கு முன்பே தெரிந்து கொண்டேன். எனக்கு அய்யம்பாளையத்தில் சொந்தமாக சொத்துக்களோ வீடுகளோ இல்லை என்றால் சரிதான். நத்தம் ரீ.ச.எண். 1212/17 புல எண்ணை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

2. நான் மாரப்ப கவுண்டர் என்பவரை நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். அவரது இறப்பு விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் சதீஷ்குமார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்று சொன்னால்

சரியல்ல. மாரியப்ப கவுண்டர் எங்கு இறந்தார் என்பதை பற்றியும் அவரது இறப்பு சான்றிதழ் எங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது பற்றியும் எனக்கு தெரியாது என்றால் எங்கு இறந்தார் என்பது மட்டும் எனக்கு தெரியும். மாரப்ப கவுண்டரும் எனது மூதாதையர்களும் அண்ணன் தம்பி உறவு முறை என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் மாரப்ப கவுண்டருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3. மாரப்ப கவுண்டர் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் மூதாதையர் வழியில் உறவுமுறை உள்ளது என்பதை காட்ட நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. மாரப்ப கவுண்டர் அய்யம்பாளையத்தில் வசித்து வந்ததாக நான் சொல்லும் வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது என்று சொன்னால் கதவு எண் தெரியாது ஆனால் வீடு தெரியும். பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு அரசால் வழங்கப்பட்ட பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பட்டாவை நான் பார்த்ததில்லை ஆனால் அங்கு தான் குடியிருந்தார்கள்.

4. ரவி கரட்டுப்பாளையத்திற்கு சென்று எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் சுமார் 25 ஆண்டுகள் இருக்கும். ரவி சென்றபோதே இந்த வழக்கின் வாதியான சதீஷ்குமார் அவருடன் சென்றுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது அய்யம்பாளையம் வீட்டில் கலைச்செல்வி தான் குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம். ரவிக்கு இந்த வாதி சதீஷ்குமாரை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் ஆமாம். ரவிக்கும் சதீஷ்குமாருக்கும் எந்த வழக்குகளும் பிரச்சனைகளும் இல்லை என்றால் சதீஷ்குமார் காதல்

திருமணம் செய்து கொண்டதால் அவர்களுக்கு இடையே சிறிது பிரச்சனை இருந்து வந்தது.

5. வாதி திருமணம் செய்து எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் சுமார் 5 ஆண்டுகள் இருக்கும் நான் திருமணத்திற்கு செல்லவில்லை என்றால் வரவேற்பிற்கு சென்றேன். சதீஷ்குமாருக்கும் அவரது தகப்பனாருக்கும் சதீஷ்குமார் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு நல்ல உறவுமுறை இருந்தது என்றால் சரியான லிங்க் இல்லை. ரவி தண்ணீர் போடுவார் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் அவருக்கு அந்த மாதிரியான பழக்கம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி தன் தகப்பனார் ரவியோடு சேர்ந்து கொண்டு இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றும் நான் மேற்படியார்களுக்கு உதவியாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6. இந்த வழக்கில் நான் வாதி சதீஷ்குமாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சதீஷ்குமாருக்கும் அவரது தகப்பனாரான ரவிக்கும் இடையே நல்ல உறவுமுறை இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பழனிச்சாமி தான் அய்யம்பாளையத்தில் வந்து குடியேறி வடக்கு சொத்திற்கு பட்டா பெற்றார் என்றும் மாரப்ப கவுண்டர் இடைக்காட்டுவலசில் வைத்தே இறந்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. மாரப்ப கவுண்டர் எந்த காலத்திலும் அய்யம்பாளையத்தில் குடியேறவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்றும் அது ஏற்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.06.10 19:11:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்